தமிழ் இணையக் கல்விக்கழகம்
**TAMIL VIRTUAL ACADEMY**

மேற்சான்றிதழ்க் கல்வி (Higher Certificate Course)
**HG30 - நிலை 3 - (Grade 3)**

நேரடி எழுத்துத் தேர்வு (Offline Examination)

மே, சூன் – 2016

நேரம் : 2.30 மணி | மதிப்பெண் : 75

பிரிவு - 1

**I** **எல்லா வினாக்களுக்கும் ஒரு சொல் / தொடரில் விடை தருக.**
Answer all questions in a word / line. **(10 x 1 = 10)**

1. காந்தியக் கவிஞர் எனப் போற்றப்படுபவர் யார்?
2. திருக்குறளில் எத்தனை அதிகாரங்கள் உள்ளன?
3. பாண்டிய நாட்டின் தலைநகர் எது?
4. பாரதியார் பிறந்த ஊர் எது?
5. முதல் முதலில் நூல் தோற்றம் பெற்ற மொழி எது?
6. காவிரியின் குறுக்கே கல்லணை கட்டியவன் யார்?
7. ‘தாயினும் சிறந்தது தமிழ்’ என்ற கருத்தினைக் கூறியவர் யார்?
8. எதனைப் பார்த்து மனிதன் வான ஊர்தியைக் கண்டுபிடித்தான்?
9. விடை எத்தனை வகைப்படும்?
10. புறத்திணைகள் எத்தனை வகைப்படும்?

பிரிவு - 2

**II** **எவையேனும் பத்து வினாக்களுக்கு ஒவ்வொன்றிற்கும் மூன்று வரிகளில் விடை தருக.**
Answer any ten questions in three lines each. **(10x2=20)**

1. சான்றோர்க்கு அழகு என்று வள்ளுவர் எதனைக் கூறுகிறார்?
2. ஐம்பூதங்கள் கடவுளை எவ்வாறு வணங்குகின்றன?
3. மழை வரும் என்பதை உணர்ந்த நண்டுகள் என்ன செய்கின்றன?
4. வாழும் உயிர்களுக்கு ஊதியமாவது எது?
5. காவிரியின் புதுவரவு கண்ட உழவர் நிலை குறித்து எழுதுக.
6. முத்தமிழ்க் காப்பியம் எனப் போற்றப்பெறுவது எது? ஏன்?
7. மழை பெய்வதற்குரிய அறிகுறிகள் யாவை?
8. ‘காவியம் மிகுந்த கலைநாடு’ என்பதில் பாவாணர் குறிப்பிடும் காவியங்கள் யாவை?
9. பாண்டியன் நெடுஞ்செழியனைப் புகழ்ந்து பாடிய சங்கப் புலவர்கள் யாவர்?
10. அனைத்து உயிரும் எவ்வாறு இருக்க வேண்டும் என்று சாலை இளந்திரையன் கூறுகிறார்?
11. இறைவன் எப்படி உள்ளான் என்று உமறுப்புலவர் கூறுகிறார்?
12. தமிழில் உள்ள காவியங்கள் சிலவற்றைக் கூறுக.

13. சொல் என்றால் என்ன?
14. அகப்பொருள் என்றால் என்ன?
15. இருவகை வாக்கியங்கள் எவை?

## பிரிவு - 3

**III எவையேனும் ஐந்து வினாக்களுக்கு ஒவ்வொன்றிற்கும் ஆறு வரிகளில் விடை தருக.**
Answer any five questions in six sentences each. **(5x4=20)**

1. எந்தெந்த பொருள்களை மகளிர் ஏந்தி கண்ணகியை மங்கல அமளியாகிய படுக்கையில் ஏற்றினர்?
2. நாரை விடு தூதில் புலவர் தம்முடைய நிலையை எவ்வாறு குறிப்பிடுகின்றார்?
3. பெண் கல்வி குறித்து பாரதிதாசன் கூறுவன யாவை?
4. தமிழ் மொழியின் பெருமைகளைப் பாவாணர் வழியில் ஏதேனும் ஐந்தினை மட்டும் எழுதுக.
5. குற்றாலத்தின் சிறப்புகளில் ஏதேனும் ஐந்தினை எழுதுக.
6. சோழ வளநாட்டில் பாய்ந்தோடும் போது தன் செயல்களாகக் காவிரியாறு குறிப்பிடும் கருத்துகளை எழுதுக.
7. வினா எத்தனை வகைப்படும்? அவை யாவை?
8. தற்குறிப்பேற்ற அணியின் இலக்கணத்தை ஒரு சான்று தந்து விளக்குக.

## பிரிவு - 4

**IV ஏதேனும் ஒன்றனுக்குப் பதினைந்து வரிகளில் விடை தருக.**
Answer any one of the following questions in fifteen sentences. **(1x10=10)**

1. புகழ் என்னும் அதிகாரத்தில் திருவள்ளுவர் கூறும் கருத்துகளைத் தொகுத்தெழுதுக.
2. இளையவன் இவனா? என்ற உரைநடையின் மையக்கருத்தினை எழுதுக.
3. முக்கூடற்பள்ளு என்ற பாடப் பகுதி குறிப்பிடும் கருத்துக்களைத் தொகுத்து எழுதுக.

## பிரிவு - 5

**V ஏதேனும் ஒன்றனுக்கு மூன்று பக்கக் கட்டுரை வடிவில் விடை தருக.**
Write an essay in three pages to any one of the questions. **(1x15=15)**

1. செந்தமிழ்க் காஞ்சி என்னும் கவிதை நூலில் பாவாணர் தமிழின் பெருமைகளாகக் கூறுவனவற்றைத் தொகுத்து எழுதுக.
2. மணி கண்ட கனவுக் கதையைச் சுருக்கி எழுதுக.

□□□□